# முதல் இடைத் தேர்வு – 2022

7 - ஆம் வகுப்பு

## அறிவியல்

பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்ந்தெடு.** 5 X 1 = 5

1. அடர்த்தியின் S.I. அலகு

அ) கிகி/மீ$^2$ ஆ) கிகி/மீ$^3$ இ) கிகி/மீ ஈ) கி/மீ$^3$

2. அறை வெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம் எது?

அ) குளோரின் ஆ) சல்பர் இ) பாதரசம் ஈ) வெள்ளி

3. ஒரு தாவரத்தின் இனப்பெருக்க உறுப்பு

அ) வேர் ஆ) தண்டு இ) இலை ஈ) மலர்

4. புகையிலை மெல்லுவதால் ஏற்படுவது

அ) இரத்த சோகை ஆ) பற்குழிகள் இ) காசநோய் ஈ) நிமோனியா

5. மாலைக்கண் நோய் ............ குறைபாட்டு நோய் ஆகும்.

அ) வைட்டமின் A ஆ) வைட்டமின் C

இ) வைட்டமின் B ஈ) வைட்டமின் E

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

1. ஒரு கன மீட்டர் என்பது .......... கன செண்டிமீட்டர்.
2. ............. வளிமண்டத்தின் அதிக அளவு காணப்படும் வாயு.
3. ஒரு பருப்பொருளின் தனித்துக் காணப்படக்கூடிய மிகச் சிறிய துகள் ................. .
4. கருவுறுதலுக்குப் பின் சூல்............... ஆக மாறுகிறது.
5. காசநோய் என்பது .................. பாக்டீரியாவால் ஏற்படுகிறது.

**III ஒப்புமை தருக.** 5 X 1 = 5

1. முதல்நிலைத் தீக்காயம் : மேற்புறத்தோல்.

இரண்டாம் நிலைத் தீக்காயம் ............. .

2. காசநோய் : காற்று

காலரா : ............... .

3 அணுக்கள் : ஒரு தனிமத்தின் அடிப்படைத்துகள்

...................... : ஒரு சேர்மத்தின் அடிப்படைத் துகள்.



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

4. பரப்பு : மீ$^2$ கன அளவு : ....................................... .

5. இஞ்சி : தரைகீழ்த் தண்டு

காரட் : ...................

**IV பொருத்துக.** 5 X 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 1. | உலோகங்கள் | - | பூச்சிகளை ஈர்க்கிறு |
| 2. | தொலைவு | - | மீ$^3$ |
| 3. | கன அளவு | - | ஒளி ஆண்டு |
| 4. | அல்லி | - | மைக்கோபாக்டீரியம் |
| 5. | காலரா | - | பளபளப்பானவை |

**V ஏதேனும் 5 வினாக்களுக்கு விடை தருக.** 5 X 2 = 10

1. பொருட்களின் அடர்த்தியை வரையறு
2. ஓர் ஒளி ஆண்டு என்றால் என்ன?
3. மூலக்கூறு - வரையறு
4. ஒரு தனிமத்தின் அணுக்கட்டு எண் என்றால் என்ன?
5. மலரின் இருமுக்கியமான பாகங்கள் யாவை?
6. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் காரணிகள் யாவை?
7. முதலுதவியின் அவசியம் என்ன?

**VI கீழ்க்காணும் சேர்மங்களின் வேதியியல் வாய்ப்பாட்டையும் அதில் அடங்கியுள்ள தனிமங்களின் பெயர்களையும் எழுதவும்.** 5 X 2 = 10

1. சோடியம் குளோரைடு.
2. பொட்டாசியம் ஹைட்ராக்சைடு
3. கார்பன் டை ஆக்ஸைடு.
4. கால்சியம் ஆக்ஸைடு.
5. சல்பர் டை ஆக்ஸைடு

**VII ஏதேனும் இரு வினாவிற்கு விரிவாக விடை தருக.** 5 X 2 = 10

1. சேர்மங்களின் பண்புகளை விவரிக்கவும்.
2. ஒரு கல்லின் அடர்த்தியை ஒரு அளவிடும் முகவை மூலம் எவ்வாறு கண்டறிவாய்?
3. தரைகீழ்த் தண்டி வகைகளை விளக்குக.



Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com